


Meeting Venue. DTEA Sr. Sec. School, Pusa Road, New Delhi



Members coming to attend the meeting.

As requisite quorum was there the meeting started with prayer at 10.30 a.m. as stipulated under Rule 28 of DTEA (Regd.) and Sri Sooriyanarayanan, President chaired the Meeting. He welcomed the members and requested the members to observe two minutes silence to condole the death of Smt. Rajeswari Vaidyanathan, PGT, Political Science, Sh. S. Raju, Chowkidar, both of DTEA Sr. Sec. School, R.K. Puram and Smt. S. Rajeswari, PGT, Economics of DTEA Sr. Sec. School, Lodi Estate. Then he informed that the proceedings will start as per agenda of notice and report already circulated to members.

**Item No. 1: confirmation of minutes of the previous General Body Meeting held on 08.01.2012:**

Shri. P Arumugam, parent member proposed the adoption of the minutes and Shri. G. Vijay Kumar, Parent member seconded it and the Chairman of the meeting confirmed that the minutes has been adopted by the members present. Then he asked the Secretary to present the Annual Report as next item for discussion.

**Item No. 2: Report of the Governing Body for the year 2011-12:**

Secretary Mr. R. Raju read the contents of the said report in Tamil to enable the members to understand the factual position as majority of the members requested him to do so.

He informed the members that the financial liabilities left behind by the previous Management up to the year 2010 has already been cleared by the present body and there is no financial liability for the Association as on date barring few property tax disputed with MCD Property Tax Department for the past several years in respect of the following three DTEA Schools. The dispute has been taken up for waiver of Rs.1,70,02,224/- through VVIP level to avoid creation of lien over the property by the authorities:

தில்லித் தமிழ்க் கல்விக் கழக விதி எண் 28ல் குறிப்பிட்டுள்ளபடி பொதுக்குழு கூட்டம் நடைபெறுவதற்குப் போதுமான உறுப்பினர்கள் எண்ணிக்கை பதிவாகி இருந்தபடியால் தலைவர் திரு. சூரியநாராயணன் அவர்களின் தலைமையில் கடவுள் வணக்கத்துடன் கூட்டம் காலை 10.30 மணிக்கு தொடங்கியது. வருகைதந்திருந்த உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்றுப்பேசிய தலைவர், கழகப்பள்ளிகளில் பணிபுரிந்து மறைந்த இராமகிருஷ்ணபுரம் பள்ளி ஆசிரியை திருமதி இராஜேஸ்வரி வைத்தியநாதன், PGT, Pol. Science அப்பள்ளி வாயில் காவலர் திரு. S.. ராஜு, மற்றும் லோதி வளாகப்பள்ளி ஆசிரியை திருமதி S. இராஜேஸ்வரி PGT, Economics ஆகியோருக்காக மௌன அஞ்சலி செலுத்துமாறு கேட்டுக் கொண்டார். மேலும் முன்னதாகவே, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுற்றிக்கையில் குறிப்பிட்டுள்ள நிகழ்வு வரிசைப்படி, ஒவ்வொரு விஷயமாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் கூறினார்.

**எண்-1: 08.01.2012 அன்று நடைபெற்ற பொதுக்குழு கூட்ட நடவடிக்கைக் குறிப்பை பரிசீலித்து ஏற்றுக் கொள்ளுதல்:**

08.01.2012 அன்று நடைபெற்ற பொதுக்குழுக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புகளில் ஏதும் முரண்பாடு இல்லாத காரணத்தினால் அதனை ஏற்றுக் கொண்டதாக உறுப்பினர் திரு P.ஆறுமுகம் அவர்கள் முன்மொழிய உறுப்பினர் திரு. G.விஜய்குமார் அவர்கள் வழிமொழிய கூட்டத்தின் தலைவர் அதனை உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டதாக அறிவித்தார். தொடர்ந்து அடுத்தகட்ட நிகழ்வாக, செயலர் திரு. இரா. ராஜு அவர்களை ஆண்டறிக்கையை அளிக்கும்படி கூறினார்.



Members record their attendance

| DTEA School | Disputed Property Tax |
|---|---|
| R.K.Puram | Rs. 93,62,040/- |
| Moti Bagh | Rs. 52,66,452/- |
| Janakpuri | Rs. 23,73,732/- |

He informed that as on 31.12.2012 the following amounts were available in the Science Club and Transport Account of the DTEA Schools besides Rs. 54,31,229/- available with DTEA making the total as Rs. 79,83,573/-.

| DTEA School | Science Club | Transport |
|---|---|---|
| Janakpuri | 1,94,865/- | 1,68,471/- |
| Pusa Road | 2,55,584/- | 1,03,501/- |
| R.K.Puram | 1,44,235/- | — |
| Moti Bagh | 2,39,455/- | — |
| Mandir Marg | 1,80,868/- | 55,976/- |
| Lodi Estate | 3,65,398/- | 3,01,475/- |
| Laxmi Bai Nagar | 4,65,825/- | 76,691/- |
| **Total** | **18,46,230/-** | **7,06,114/-** |

He also readout the comparative financial position of DTEA from the year 2003 to 2011-2012 to enable the members to assess the performance of the Governing Bodies that they have elected during the period under review:

| Year | Bank Balance | Over Draft |
|---|---|---|
| 2003 | Nil | 17,69,000/- from IOB Janakpuri |
| 2003-04 | Nil | 20,00,000/- from Syndicate Bank Rajinder Nagar, New Delhi |
| 2009 | | 32,13,598/- Other Liabilities |

## எண்-2: 2011- 2012 ஆம் ஆண்டிற்கான செயற்குழு அறிக்கை

கல்விக் கழக செயல்பாடுகளையும் தற்போதைய நிலையையும் அனைத்து உறுப்பினர்களும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக செயலர் அறிக்கையை தமிழில் படிக்க வேண்டும் என்று பெரும்பாலான உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க செயலர் திரு. இரா. ராஜூ அவர்கள் ஆண்டறிக்கையைத் தமிழில் படித்தார்.

கடந்த நிர்வாகத்தினரால் 2010 வரை வைக்கப் பட்டிருந்த மொத்தக்கடன் தொகையும் தங்கள் நிர்வாகத்தால் கடந்த ஆண்டு அடைக்கப்பட்டு விட்டது எனவும் தில்லி மாநகராட்சிப் பகுதியில் இருக்கும் கீழ்க்காணும் மூன்று பள்ளிகளுக்குப் பலவருடங்களாகச் சொத்து வரி கட்டப்படாமல் உள்ளது எனவும் மாநகராட்சிக்குக் கட்டப்பட வேண்டிய ரூ.1,70,02,224/-க்கும் பல முக்கிய பிரமுகர்கள் வாயிலாக விதிவிலக்குப் பெறுவதற்கு முயன்று வருகிறோம் எனவும் கூறினார்.

| **பள்ளிகள்** | **கட்டவேண்டிய வரிப்பணம்** |
|---|---|
| இராமகிருட்டிண புரம் | ரூ.93,62,040/ - |
| மோதிபாக் பள்ளி | ரூ. 52,66,452/- |
| ஜனக்புரி பள்ளி | ரூ.23,73,732/- |

தொடர்ந்து அவர் பேசுகையில் 31.12.12ல் ஏழு பள்ளிகளின் சயின்ஸ் கிளப், போக்குவரத்து கணக்கு ஆகியவற்றில் ரூ. 25,52,344/- உள்ளதாகவும் அது தவிர கழகத்திடம் உள்ள ரூ.54,31,229 /-ஐயும் சேர்த்து தற்சமயம் மொத்தம் கையிருப்பாக ரூ.79,83,573 உள்ளது என்று கூறினார்.

| **பள்ளி** | **கையிருப்புக் கணக்கு** | |
|---|---|---|
| | **சயின்ஸ் கிளப்** | **போக்குவரத்து** |
| ஜனக்புரி | ரூ. 1,94,865/- | ரூ. 1,68,471/- |
| பூசா சாலை | ரூ. 2,55,584/- | ரூ. 1,03,501/- |
| ஆர். கே. புரம் | ரூ. 1,44,235/- | -- |
| மோதிபாக் | ரூ. 2,39,455/- | -- |
| மந்திர் மார்க் | ரூ. 1,80,868/- | ரூ. 55,976/- |
| லோதிவளாகம் | ரூ. 3,65,398/- | ரூ. 3,01,475/- |
| இலக்குமிபாய் நகர் | ரூ. 4,65,825/- | ரூ. 76,691/- |
| **மொத்தம்** | **ரூ. 18,46,230/-** | **ரூ. 7,06,114/-** |




Shri R. Raju, Secretary DTEA read the Annual Report.

| | | |
|---|---|---|
| 2010-11 | 44,88,719/- | In DTEA Bank A/c |
| | 43,09,555/- | In PTA, Science Club Trpt. Accounts |
| Total | **87,98,274/-** | |
| **2011-12** | 54,11,229/- | In DTEA Bank A/c |
| | 25.52.344/- | In PTA, Science Club Trpt. Accounts |
| Total | **79,63,573/-** | |

Members applauded and expressed their satisfaction and condemned the previous Body for the mis management of the schools. At this stage former Secretary and Jt. Secretary of DTEA Mr. J. Swamimalai and Mr. M.A. Suresh respectively along with one Mr. S. Vijayakumar, a parent member of Janakpuri Sr. Sec. School, a resident of Block – O, Qtr No 3, ESIC Complex, Mangolpuri, New Delhi.and former PTA Secretary of Pusa Road School Mr. Thangavelu shouted slogans, tried to record the proceedings in their mobile phone and disturb the proceedings. Chairman and others on the stage asked them not to create ruckus and videograph the proceedings in their mobile phone as videograph recording is already in progress but they were bent upon to disturb the proceedings and pandemonium prevailed for some time and the police personnel who were present at the meeting were forced to cease the mobile phone and took them out. When normalcy restored the proceedings started again.

He said that on the academic side remarkable improve ment has been achieved in the performance of the Schools with the cooperation of the Principals, teachers and other staffs. He listed out the facilities provided in the schools to expose students to innovative learning, guide teachers to know the methodology through training to make remarkable change in the students' performance. He also informed that steps like introduction of zero periods for remedial teaching, regular meetings of parents & teachers to discuss students' performance and problems, weekly tests and special

மேலும், உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்த நிர்வாகக் குழுவினரின் செயல் திறன், நிர்வாகத் திறன் பற்றி அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக 2003 முதல் 2011-2012 வரைக்குமான நிதி நிலைமை பற்றிய இலாப நஷ்ட கணக்கை வருட வாரியாக ஒப்பிட்டுக் காட்டினார்.

| **வருட ம்** | **வங்கி சேமிப்பு** | **அதிகப்பற்று** |
|---|---|---|
| *2003* | -- | *17,69,000* இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஜனக் புரி கிளை (கடன்) |
| *2003-2004* | -- | *20,00,000* சின்டிகேட் வங்கி இராஜேந்தர் நகர் கிளை (கடன் ) |
| *2009* | -- | *32,13,598* இதர செலவுகள் (கடன் ) |
| *2010-2011* | *44,88,719* (தில்லித் தமிழ்க் கல்விக் கழக வங்கிக் கணக்கில் இருப்பு) *43,09,555* (PTA , SC மற்றும் போக்கு வரத்துவங்கிக் கணக்கில் உள்ள கையிருப்பு தொகை) | |
| மொத்தம் | **87,98,274** | -- |
| *2011-2012* | *54,11,229* (தில்லித் தமிழ்க் கல்விக் கழக வங்கிக் கணக்கில் இருப்பு) *25,52,344* (PTA , SC மற்றும் போக்கு வரத்துவங்கிக் கணக்கில் உள்ள கையிருப்பு தொகை) | |
| மொத்தம் | **79,63,573** | -- |

செயலர் இதனை வாசித்ததும் வருகை தந்திருந்த உறுப்பினர்கள் அனைவரும் கரவொலி எழுப்பித் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்ததோடு முந்தைய நிர்வாகத்தினரின் தவறான நிர்வாகம் குறித்துக் கண்டனக் குரல் எழுப்பினர். முன்னாள் செயலர் திரு J.சாமிமலை, முன்னாள் இணைச் செயலர் திரு. M.A. சுரேஷ் ஆகியோர் ஜனக்புரி பள்ளியைச் சார்ந்த

## 17.03.2013 அன்று பூசா சாலை தில்லித் தமிழ்க் கல்விக் கழக மேனிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற தில்லித் தமிழ் கல்விக் கழக ஆண்டு பேரவைக் கூட்ட நிகழ்வுகளின் குறிப்பு.



Members watch the proceedings in attention.

classes etc., aiming at improving the education standard of the students.

He added that keeping in view the primary concern of improving the education standard further right from the grass-root level, EZ Vidya Scheme for the primary classes with modern teaching techniques has been implemented in the schools. The books and the teacher's training fees costing about three lakhs rupees was borne by DTEA and the parents were not burdened. He said EZ Vidya Scheme will raise the standard level of education of the children at the foundation level itself catering to the needs of each child. He reminded that private schools increased the level of education standard of their students through such Scheme only Hence, the management in order to improve the standard of education of our children, has introduced it in our schools also. There is no need to buy seperate book as the books supplied to the students are complete in all respect and our children can learn and understand in a better way and the parents had to spend few hundreds only for this. He asked the parent members can't they spend this small amount for the sake of improving their ward's education standards? Members present in one voice replied that they want better education for their wards and they are ready to bear the costs of such books for the sake of their childrens' education. He also drew the attention of the members of distribution of NCERT text books to the students of class VI to X and class XII of all the DTEA Schools at free of cost and distribution of five thousand books by NBT to the library of seven Schools for exposure of good reading to our students. In addition to this, digital classrooms for the Middle and Secondary level students have been introduced in Lodi Estate and Laxmi Bai Nagar. He said the computer aided teaching method promises great exposure to children and kindles their creativity and imagination. In addition to this AIF program, computer training was conducted to benefit the teachers to teach. Two of our Vice Principals Mrs Raji Kamalasanan and Mrs. Geetha Arunachalam attended the 4th International Conference *"Excellence in*

உறுப்பினரர் திரு.S.விஜய் குமார், மற்றும் பூசா சாலை பள்ளியின் முன்னாள் செயலர் திரு.தங்கவேலு ஆகியோரோடு சேர்ந்து கூட்ட நிகழ்வுகளுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் கூச்சலிட்டனர். கூட்டத் தலைவரும் மற்றவர்களும் வீணாகக் குழப்பங்கள் விளைவிக்க வேண்டாம் என்றும் நிகழ்வுகளை முறையாக ஒளிப்படம் எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்றும் எடுத்துக்கூறிய பின்னரும் அவர்கள் தங்கள் தகாத நடவடிக்கை களைக் கைவிடவில்லை. எனவே கூட்டத்திற்கு வருகை தந்திருந்த காவல் துறையினர் அவர்களை கூட்டத்தைவிட்டு வெளியேற்றினர். கூச்சல் நீங்கி அமைதி ஏற்பட்ட பின்னர் கூட்ட நிகழ்வுகள் மீண்டும் தொடர்ந்தன.

செயலர் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் பள்ளி முதல்வர்கள், துணை முதல்வர்கள், ஆசிரியர்கள், மற்றும் பணியாளர்கள் ஒத்துழைப்பினால் கல்வித் தரத்தில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். தொடர்ந்து அவர், பள்ளிகளில் கற்பதற்கான வசதிகளைப் பெருக்கியது, மாணவர்களின் கற்றல் திறனை வெளிப்படுத்த வைத்தது, கற்பித்தல் முறையில் கவனம் செலுத்தி கற்றலில் ஆர்வம் ஏற்படவைத்தது, கற்பித்தலுக்கான பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்கியது என மாணவர்களின் கல்வித் தரத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கான காரணங்களை வரிசைப் படுத்தினார். மேலும், மாணவர்களுக்குத் தனி கவனம் செலுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட zero periods, மாணவர்களின் கல்வித் தரம் மற்றும் அவர்களைப் பற்றிய பிரச்சினைகள் குறித்து கலந்தாலோசிப்பதற்காக அடிக்கடி பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சந்திப்பதற்கு ஏற்படுத்தித் தரப்பட்ட வாய்ப்புகள், வாரத் தேர்வுகள், சிறப்புப் பயிற்சி வகுப்புகள் போன்றவையும் இவ்வெற்றிக் கான காரணங்கள் என்று குறிப்பிட்டார். இதைக்கேட்ட உறுப்பினர்கள் தங்கள் மகிழ்ச்சியை கரவொலி மூலம் வெளிப்படுத்தினர்.

அடிப்படைக் கல்வி நன்றாக அமைய வேண்டும் என்பதற்காக தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு EZ Vidya கல்வி முறையை புதிய கற்பித்தல் முறை களோடு கொண்டுவந்ததாகவும் அதற்குரிய புத்த கங்களுக்காகவும் ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகளுக்காகவும் மூன்று இலட்சம் ரூபாய் செலவுச் சுமையை கழகமே ஏற்றுக்கொண்ட தாகவும் அதனை பெற்றோர்களுக்கு சுமையாக ஆக்கவில்லை



S. Vijaykumar who tried to illegally videograph the proceedings and members who objected to it.

*Education*" organized by IIT. He said that periodical monitoring by the Management through inspection by experts has also stepped up the quality of teaching process. With the result more and more students are seeking admission in our Schools and now the student teachers ratio has changed. Hearing this, member lauded the efforts taken by the management by clapping their hands.

With regard to Development works he said to provide quality education the infrastructure facilities were made available to each School depending on its individual requirement and condition. He said to begin with, the present Management has decided to start a college initially for vocational subjects like B.A, BBA, B.Com, M.A., etc. at DTEA Sr. Sec. School, Moti Bagh and efforts are in progress to secure "NOC" from the Land and Development Office of Govt. of India for opening this college in evening shift and Expert Committees have been constituted and the same has been working hard to submit its report on the assignments given to them. He further added that these efforts will bring fruitful results very soon and our dream of having a College for our children in the Capital at the earliest will become a reality. On hearing this members lauded the efforts of the Governing Body by clapping their hands.

He informed that when Civil Writ Petition No. 915/2007 filed before the single judge in Delhi High Court by the previous management was dismissed an appeal (LPA No. 806/2011) was filed with the Division Bench and it was allowed by it on 23.03.2012 and DDA was directed to hand over the physical possession to the management for construction of school building in the said land at Mayur Vihar Phase-III. Physical possession was given on 25.06.2012 and "NOC" was obtained from DDA for the construction of the school Building. Architects of repute have been consulted and the strategies being worked out to arrive at the tentative cost of construction of the school building and efforts are on to collect funds. Members appreciated the management for their efforts and clapped their hands in unison.

*எனவும் கூறினார். தனியார் பள்ளிகள் இதுபோன்ற தரம்வாய்ந்த கல்வி முறையை அறிமுகப் படுத்தியே தங்கள் பள்ளியின் தரத்தை உயர்த்துகின்றன. அது போன்று நம் பள்ளிப் பிள்ளைகளும் கல்வித் தரத்தில் முன்னேறுவதற்காகவே இதனை அறிமுகப் படுத்தியுள்ளோம் என்றும் இதற்கான புத்தகங்கள் வாங்கும் போது தனியாகப் பயிற்சி ஏடுகள் வாங்கத் தேவையில்லை. அவற்றிலேயே அனைத்தும் உள்ளன. இதனால் பெற்றோர்களுக்கு அதிகப் படியாகச் செலவாகப் போவது சில நூறு ரூபாய்களே ஆகும். அதிகச் செலவுச்சுமை கிடையாது என்று எடுத்துக் கூறிய பின் அவர் அங்கு வருகை தந்திருந்த உறுப்பினர்களை நோக்கி உங்களால் உங்கள் பிள்ளை களுக்காக இந்தச் சிறு செலவை ஏற்க முடியாதா? அவர்களின் கல்வித்தரம் உயர வேண்டாமா? என்று கேட்டபோது அனைவரும் ஒருமித்த குரலில், 'எங்கள் பிள்ளைகளுக்குத் தரமான கல்விதான் வேண்டும். எங்களால் இச்செலவுத் தொகையை ஏற்க முடியும்.' என்று கூறினர்.*

*மேலும் அவர், 6, 7, 8, 9, 10 மற்றும் 12 வகுப்பு களுக்கான பாடப் புத்தகங்களை நிர்வாகம் இலவசமாக அனைத்துத் தமிழ் மாணவர்களுக்கும் வழங்கியதையும் மாணவர்களிடம் வாசித்தல் திறனை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காக நிர்வாகம் பெருமுயற்சி எடுத்து* NBT *யிலிருந்து 5,000 புத்தகங்களை வாங்கி ஏழு பள்ளி நூலகங்களுக்கும் வழங்கியதையும் கூறினார். இது மட்டுமன்றி நடு நிலை மற்றும் உயர்நிலை வகுப்பு மாணவர்களுக்காக டிஜிட்டல் வகுப்புகளை லோதி வளாகம் பள்ளியிலும் இலக்குமிபாய் நகர்ப் பள்ளியிலும் ஏற்படுத்திய தாகவும் கணினி வழிக்கல்வியினால் மாணவர்களின் திறன்கள் வளர்வதோடு அவர்களின் புத்தாக்கத் திறனும் கற்பனை சக்தியும் கண்டிப்பாக அதிகரிக்கும் என்றும் கூறினார். அத்தோடு* AIF program, *மற்றும் ஆசிரியர்களுக்காக கணினிப்பயிற்சிகளும் அவர் களின் கற்பித்தலுக்கு உதவுவதற்காக வழங்கப் பட்டன எனவும் கூறினார். "Excellence in Education" என்ற தலைப்பில்* IIT *நடத்திய 4 வது அனைத்து நாடுகளின் மாநாட்டில் நம் பள்ளிகளைச் சார்ந்த துணை முதல்வர்கள் திருமதி இராஜி கமலாசனன் அவர்களும் திருமதி கீதா அருணாசலம் அவர்களும் கலந்து கொண்டாதாகக் கூறினார். தொடர்ந்து அவர் பேசுகையில், நிர்வாகத்தினரின் தொடர்ந்த கண் காணிப்பும், வழிகாட்டுதலும் கற்பித்தல் பணியில் மேலும் சிறந்த மாற்றங்களைக் கொண்டுவந்துள்ள தாகத் தெரிவித்தார். பள்ளிகளின் முன்னேற்றத்தால்*



Group of miscreants who tried to disturb the proceedings.

He said that the Mandir Marg school had its inception in 1923 and 90 years already passed but the infrastructure and allied facilities had a drastic downfall during this long period. The present Management has brought in total transparency and infused new confidence into the system. With the result, help was pouring-in from all sides. A major renovation of the School has been completed by the DTEA alumni costing to Rs. 30.00 lakhs. New toilets with accessories, electrical and water connections, Oil Bound painting, garden etc., have been done in the school. Fire safety system, water tanks with a capacity of 20,000 ltr.,(one for drinking water and the other for fire safety) have been installed.

In Lodi Estate School two walls erected in the library to make two extra rooms and repair of toilets in the first floor and in the playground have been done. Laying of vitrified tiles in the labs, polishing of furniture and painting of the labs also been completed. Aqua guard in the staff room and ceiling fans for the School were installed through donation. Four Digi class rooms are successfully used and eight more are to be developed this year.

The alumni of Pusa Road school provided AV room with projector, display screen, laptop and neat plastic furniture, green boards and wall fans and carried out white washing, concealed electrical wiring and plastic pipes have given a new look to the School. The problem of water logging has been controlled with great effort. False roofs and flooring has been done in two rooms. Repair of window panels in all classes, renovation of staff rooms were carried out. Designing of Bala-boards related to different subjects has been done. New play materials for primary children have been provided. A scanner and printer have been donated and a new model classroom has been provided by the alumni under the guidance of the Management. Diksha, a botanical garden of rare medicinal plants has been developed. Aravalli has developed a 3 dimensional room. Mushroom Cultivation has been encouraged and has been widely appreciated. Paper recycling, electronics and sewing has been introduced as vocational courses to expose students to activity based learning.

மாணவர்களின் சேர்க்கை விகிதம் பன்மடங்கு அதிகரித்துள்ளது என்றும் இதனால் மாணவர்கள் ஆசிரியர்கள் விகிதாசாரத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் கூறினார். அதனைக் கேட்ட உறுப்பினர்கள் அனைவரும் நிர்வாகத்தினரின் சிறந்த முயற்சிகளைப் பாராட்டும் விதமாகப் பலத்த கரவொலி எழுப்பினர்.

வளர்ச்சிப்பணிகளைப் பற்றி குறிப்பிடுகையில் தரமான கல்வியை மாணவர்களுக்குத் தரவேண்டும் என்பதற்காகப் பள்ளிகளின் தேவைகளைப் பொறுத்து பள்ளிகளின் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்றார். மேலும் மோதிபாக் பள்ளியில் பி.ஏ, எம்.ஏ, பி.பி.ஏ, பி.காம், போன்ற பாடங்களுக்கான மாலை நேரக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்கலாம் என்று தற்போதைய நிர்வாகம் முடிவு செய்து Govt. of India, Land and Development Office, நிர்மான் பவனிலிருந்து "NOC" வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்றும், சிறந்த நிபுணர்களைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டு அக்குழுக்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பணிகளைச் செவ்வனே செய்து அறிக்கைகளைத் தருவதற்காக கடுமையாக உழைத்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார். தொடர்ந்து பேசிய அவர், இந்த இடைவிடாத முயற்சிகளினால் தலைநகரில் தமிழ்ப் பிள்ளைகளுக்காகக் கல்லூரி அமைக்க வேண்டும் என்ற நீண்ட நாளைய கனவு வெகு சீக்கிரத்தில் நனவாகும் என்று தெரிவித்தார். இதைக் கேட்ட உறுப்பினர்கள் அனைவரும் மிக்க மகிழ்வோடு நிர்வாகத்தினரின் இந்த முயற்சியைப் பாராட்டும் விதமாகக் கரவொலி எழுப்பினர்.

முந்தைய நிர்வாகத்தினர் தில்லி உயர் நீதி மன்றத்தில் தனி நீதிபதி முன் ஒரு சிவில் ரிட் பெட்டிஷன் (எண். 915/2007) தாக்கல் செய்திருந்தனர். ஆனால் அவ்வழக்கு DDAவுக்கு ஆதரவாகத் தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போதைய நிர்வாகம் மேல் முறையீட்டை (LPA No. 806/2011) உயர்நீதி மன்றத்தில் டிவிஷன் பெஞ்ச் முன்னிலையில் தாக்கல் செய்ததாகவும் மேல் முறையீடு 23.03.2012 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்டு DDA. மயூர் விஹார் பகுதி-3ல் உள்ள அக்குறிப்பிட்ட நிலத்தினை பள்ளிக்கூடம் கட்டுவதற்காக தில்லித் தமிழ்க் கல்விக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என ஆணையிட்டது என்றும் அந்நிலம் 25.06.2012 அன்று கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது என்றும் தெரிவித்தார். மேலும் DDAவிடமிருந்து கட்டிடம் கட்டுவதற்கான "NOC" வாங்கப்பட்டு



Members listening the address of the Secretary

In R.K Puram School, sports facilities have been improved and the provision of basketball court has been made, clearing the ground, repair work of the terrace to control seepage was in progress. Legal literacy club to expose our children to Indian legal system has been introduced. In Laxmi Bai Nagar School a roof has been erected at the drinking water area for protecting the students from drenching during rainy and scorching sun. Digi classes have been started in a big way.

In Moti Bagh School repair of compound, fixing main gate, plastering and white washing in the ground floor and Oil bound painting, new almirahs and pin boards and green boards, replacement of old fans, purchase of furniture, polishing of furniture, have been done with the support of the DTEA alumni and under the guidance of the Management. Digital Equalizer lab has been developed.

In Janakpuri school, the task of re-plastering of roofs of 3 rooms and laying of floor tiles in the computer labs have been done. Aqua guard and water Coolers for students have been installed. He thanked the Alumni who were very supportive in installing 5 computers and water coolers. Repair of toilets has also been undertaken. He said further Renovation work at DTEA Sr. Sec. School, Janakpuri and Moti Bagh is being taken up shortly with the help of some voluntary organizations and individuals.

While discussing about staff matters, he informed that three teachers took voluntary retirement and one PGT teacher died during the period and DPC's have been conducted and promotions have been given to various categories. Financial up gradation like ACP and MACP being pursued with utmost urgency; Salary has been paid to the staff without any delay; Management's Contribution of 5% of the gross salary and allowances was paid well in advance; ad-hoc Teachers/Association staff and Group–D salary has been paid on time without any delay. He further said that 33 vacancies have been filled in all the seven DTEA Schools by direct recruitment.

விட்தாகவும் சிறந்த பொறியாளர்களைக்கொண்டு அந்த நிலத்தில் கட்டிடம் கட்டுவதற்கான செலவுத் தொகை கணக்கிடப்பட்டு அதற்கான நிதி திரட்டு வதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவித்தார். இதனைக் கேட்ட உறுப் பினர்கள் அனைவரும் கரவொலி எழுப்பி தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்தனர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் **மந்திர்மார்க் பள்ளி** 1923இல் ஆரம்பிக்கப்பட்டு 90 வருடங்களைக் கடந்தும் அதன் உள்கட்டமைப்பு இதுவரை சரிசெய்யப்படாமல் மிகவும் மோசமான நிலைமை யிலேயே இருந்து வந்தது என்றும் தற்போதைய நிர்வாகத்தினரின் சுரண்டலற்ற நம்பிக்கையான நிர்வாகத்தாலும் நிர்வாகத்தில் கொண்டுவந்த மாற்றங்களினாலும் அனைத்துப் பக்கங்களில் இருந்தும் உதவிகள் ஊற்றுக்கண்களாகச் சுரந்தன என்றும் பள்ளியின் முன்னாள் மாணவர்கள் அமைப்பின் உதவியோடு 30 இலட்சம் ரூபாய் செலவு செய்து பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகள் முடிவடைந்துள்ளன என்றும் கூறினார். மேலும், கழிப்பறைகள் சீரமைக்கப்பட்டதோடு குடிநீர் மற்றும் மின்சார இணைப்புகள் அனைத்தும் மாற்றப்பட்டு புதியன பொருத்தப்பட்டுள்ளன என்றும் பள்ளிக் கூடம் முழுவதும் Oil bound paint அடிக்கப் பட்டுள்ளது என்றும் கூறினார். தீயணைப்பு கருவி பொருத்தப்பட்டுள்ளதாகவும் 20,000 லிட்டர் கொள் ளளவு கொண்ட இரண்டு தண்ணீர் தொட்டிகள் (ஒன்று தீயணைப்புக் கருவிக்காகவும் மற்றொன்று குடிநீருக்காகவும்) புதிதாக அமைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவித்தார்.

**லோதிரோடுபள்ளி**யில் வகுப்பறைகளை அதிகப் படுத்துவதற்காக நூலகத்தில் அதிகப்படியாக இருந்த இடத்தில் தடுப்புச்சுவர்கள் கட்டப்பட்டுள்ள தாகவும் விளையாட்டு மைதானத்திலும் முதல் தளத்திலும் இருந்த மாணவர்களின் கழிப்பறைகள் சீரமைக்கப் பட்டதாகவும் தெரிவித்தார். ஆய்வுக் கூடங்களில் சுவர்கள் வர்ணம் பூசப்பட்டதோடு புதிதாகத் தரை ஓடுகள் பதிக்கப்பட்டு மேசைகள் மற்றும் அல மாரிகள் பழுதுபார்க்கப் பட்டுள்ளன என்றும் கூறினார். நன்கொடை மூலமாக புதிய மின்விசிறிகள் வாங்கப்பட்டதோடு ஆசிரியர்களின் ஓய்வறையில் புதிய Aquaguard பொருத்தப்பட்டதாகத் தெரி வித்தார். மேலும், 4 வகுப்பறைகள் டிஜிட்டல் வகுப்பறைகளாக மாற்றப்பட்டதோடு மேலும் எட்டு



Members listening the address of the Secretary

He said the Final Grant-in-Aid totaling Rs. 1,08,36,377/- was not claimed by the previous Managements in respect of the following Schools since 1992 and the same has since been claimed School wise by the present Management as indicated below:-

| DTEA School | GIA claimed for the year | Amount (approx.) |
|---|---|---|
| Janakpuri | 1998-2012 | 25,24,833/- |
| Pusa Road | 1996-2012 | 22,87,331/- |
| R.K.Puram | 1992-2012 | 22,42,862/- |
| Moti Bagh | 1995-2012 | 8,41,319/- |
| Mandir Marg | 1997-2012 | 6,52,830/- |
| Lodi Estate | 2008-2012 | 3,66,000/- |
| L.B.Nagar | 1992-2012 | 19,21,202/- |

He informed the members that the previous management in order to raise a loan of Rs. Two crore from Indian Bank made an attempt to pledge the Pusa Road School and Lakshmibai Nagar school but they could not succeed as the bank insisted for production of "No Objection Certificate" from L&D office to pledge the property that belonged to DTEA. Had they got the said NOC from L&D office, they would have pledged all the seven school buildings and took 7 crore loan from the banks. In that case what would have happened to our schools? he asked. While continuing his speech he told that Mr. J. Swamimalai and Mr. Suresh have signed blank vouchers sanctioning amounts Rs. 50,000/-, 20,000/-& 10,000/- etc., and took the money for themselves. Hearing this the members became furious and raised slogans against them.

While discussing about other activities he talked about overall development of the child and therefore a number of activities are being undertaken periodically to enhance the personalities of the students. In Zonal Sports, students have brought laurels to the School in badminton, kho-kho, volleyball, kabaddi, to name a few. There has been a good participation in zonal literary, cultural events

வகுப்பறைகள் இவ்வருடம் மாற்றப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசுகையில் **பூசா ரோடு பள்ளியின்** முன்னாள் மாணவர்கள் மூலமாக உருவாக்கப்பட்ட புரஜெக்டருடன் கூடிய ஆடியோ விஷூவல் அறை, லேப்டாப், பிளாஸ்டிக் இருக்கைகள், பச்சை வர்ண பலகைகள், புதிய அறிவிப்புப் பலகைகள், ஆகியவற்றாலும் கட்டிடம் முழுவதும் வெள்ளையடிக்கப்பட்டு மின்சார இணைப்புகள் பழுது பார்க்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டதால் பள்ளிக்குத் தனி அழகு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். மேலும் மழைக்காலத்தில் நீர் தேங்குவது மிகுந்த பிரயத்தனத்திற்குப் பின் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் இரண்டு அறைகளில் தற்காலிகமாக மேற்கூரை அமைக்கப்படதோடு தரைகளும் சரிசெய்யப்பட்டுள்ளன என்றும் கூறினார். அனைத்து வகுப்புகளிலும் சன்னல்கள் சரிசெய்யப்பட்டதோடு ஆசிரியர்களுக்கான ஓய்வறையும் சீரமைக்கப்பட்டது என்றார். பல பாடங்கள் சார்ந்த பல செய்திகளுடன் கூடிய வண்ணப் படங்கள் தீட்டப்பட்டுள்ள பாலர் செய்திப் பலகைகள் பொருத்தப்பட்டதோடு தொடக்கப்பள்ளி மாணவர்களுக்காகப் புதிய விளையாட்டுப் பொருட்கள் வாங்கப்பட்ட தாகவும் தெரிவித்தார். மேலும் நிர்வாகத்தினரின் வழிகாட்டுதலின் படி பள்ளியின் முன்னாள் மாணவர் களால் ஒரு ஸ்கேனரும் ஒரு பிரிண்டரும் வழங்கப்பட்டதோடு ஒரு வகுப்பறையும் புதிதாக அமைத்துக் கொடுக்கப் பட்டது என்றும் கூறினார். தீக்ஷா என்ற மூலிகைத் தோட்டம் தோற்றுவிக்கப் பட்டது பற்றியும் பல அரிய மூலிகைகள் அங்கு வளர்க்கப்படுவது பற்றியும் ஆரவல்லி என்ற கல்வியமைப்பு மூலம் 3D அறை உருவாக்கப்பட்டமை குறித்தும் எடுத்துரைத்தார். மேலும், பூசா ரோடு பள்ளியில் **காளான் உற்பத்தி** செய்வதற்கு ஊக்குவிக்கப்பட்டமையையும் அனைவரின் பாராட்டுதல் கிடைத்தமையையும் தெரிவித்தார். தையற்கலை, காகித மறுசுழற்சி பயன்பாட்டு முறை, மின் பொருள் தயாரிப்பு போன்ற பயிற்சிகள் மாணவர்களின் திறன்களை வெளிப்படுத்தி வளர்ப்பதற்காகத் தொடங்கப்பட்டுள்ளன என்பதையும் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து, **இராமகிருஷ்ணபுரம் பள்ளியில்** கூடைப்பந்து மைதானம் அமைக்கப்பட்டதையும் மைதானம் சீரமைக்கப்பட்டதையும் மாடியிலிருந்து மழை நேரத்தில் சுவரில் ஏற்படும் ஈரக்கசிவை நீக்குவதற்காகப் பழுது பார்க்கும் பணி நடந்துகொண்டிருப்பதையும் தெரிவித்தார். மேலும், மாணவர்கள்



Members listening the address of the Secretary

and science exhibition and students have bagged prizes. Eco-club activities and house activities have been a regular feature to give a ground to students to bring out their talents. He said in the annals of DTEA an Exhibition "*Adhyayen Talent Search Exhibition*" has been organized in all the seven branches of DTEA Schools on 15th and 16th December 2012 to identify the Italent of the students of the DTEA Schools and to develop the competitive spirit amongst them. The judges were invited to select the subject wise first, second and third position of the Schools among the DTEA Schools. A large number of visitors/ parents visited the exhibition and appreciated the Management's efforts. Tamil competitions as part of Pongal celebrations have been organized. Mock drills for disaster management and fire alarm has been conducted in all Schools. Lot of workshops for students and teachers were conducted at regular intervals. Other than this, celebration of Independence Day, Republic Day, Gandhi Jayanti, Teachers Day, Earth Day to name a few, were celebrated. Lot of other activities in each School organized to provide a conducive and enjoyable learning atmosphere.

He said that DTEA has seen its glorious years till 1990s and it fell on its crest in the last two decades. The present Management is making all-out efforts with the cooperation of Principals, teachers, staff, parents and active participation of alumni and many other well wishers to retrieve its past glory and to sustain the progress. He expressed his gratitude and thanks the office bearers and members of the Governing Body and Principals & Teachers and parent members for extending their cooperation to him in discharging his duties.

On behalf of his team he pledged to continue to work hard with same zest and zeal in order to achieve greater heights and to reach the goal of making DTEA schools become the No. 1 educational institutions in the capital city of Delhi. He requested the members to adopt the report. On concluding his speech members gave a standing ovation to him and unanimously voiced that they adopt the said report. Chairman announced that the

சட்ட நுணுக்கங்களை அறிந்து விழிப்புணர் வடைவதற்காக Legal Literacy Club ஆரம்பிக்கப் பட்டுள்ளது என்பதையும் எடுத்துரைத்தார். **இலக்குமிபாய் நகர் தமிழ்ப் பள்ளியில்** மாணவர்கள் நீர் அருந்தும் இடத்தில் மேற்கூரைப் போடப் பட்டுள்ளது என்பதையும் பெரிய அளவில் டிஜிட்டல் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதையும் கூறினார்.

**மோதிபாக்** பள்ளியில் நிர்வாகத்தினரின் வழிகாட்டு தலின்படி முன்னாள் மாணவர்கள் உதவியோடு வெளிப்புற சுற்றுச் சுவர் செப்பனிடப்பட்ட தோடு புதிய நுழைவு வாயில் கதவு ஒன்று பொருத்தப் பட்டுள்ளது என்றும் கீழ்த்தளத்திலுள்ள வகுப்பறை களுக்கு வெள்ளை அடிக்கப்பட்டது என்றும் அலமாரிகள், குறிப்புப் பலகைகள், பச்சை வண்ணப் பலகைகள் ஆகியவை வாங்கப்பட்டன என்றும் பழைய மின்விசிறிகள் அனைத்தும் மாற்றப்பட்டு புதிய மின்விசிறிகள் பொருத்தப்பட்டன என்றும் கூறினார். Digital equalizer laboratory அமைக்கப் பட்டது பற்றியும் எடுத்துக் கூறினார்.

**ஜனக்புரி பள்ளி**யைப் பொறுத்த வரையில் 3 வகுப் பறைகளுக்கு மறுபூச்சு செய்யப்பட்டதாகவும் கணினி ஆய்வகத்திற்கு புதிய தரை ஓடுகள் பதிக்கப் பட்டதாகவும் மாணவர்கள் சுத்தமான குளிர்ந்தநீர் பருகுவதற்கான சாதனம் பொருத்தப்பட்டதாகவும் தெரிவித்தார். 5 கணிப்பொறிகளும் குளிர்நீர் சாதனமும் பொருத்துவதற்கு உதவி புரிந்த முன்னாள் மாணவர்கள் அமைப்புக்குத் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். தொடர்ந்து பேசிய அவர் ஜனக்புரி தமிழ்ப் பள்ளி மற்றும் மோதிபாக் தமிழ்ப் பள்ளிகளின் மற்ற சீரமைப்புப் பணிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியோடும் நல்ல உள்ளம் கொண்டோரின் உதவியோடும் விரைவில் நடைபெறும் என்றும் தெரிவித்தார் .

ஆசிரியர்கள் குறித்து பேசுகையில் மூன்று ஆசிரியர் கள் விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டதாகவும் ஒரு P.G.T ஆசிரியர் இயற்கை எய்தியதாகவும் கூறினார். மேலும் DPC's நடத்தப்பட்டு துறை சார்ந்த பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன என்றும் கூறினார். தொடர்ந்த நடவடிக்கைகளால் ACP, MACP ஆகியவை அனைவருக்கும் விரைவில் கிடைத்தன என்பதையும் ஆசிரியர்களுக்குத் தாமதமின்றி ஊதியம் வழங்கப்படுகின்றது என்பதையும் நிர்வாகம்



Sh. K. Mani, Treasurer present the audited accounts and Budget Estimate

report has been unanimously adopted by the General Body.

**Item No. 3: Adoption of Audited Statement of Accounts for the FY 2011-12 and**
**Item No. 4: Approval for the Budget Estimate for the FY 2013-14**

Treasurer of DTEA Shri K. Mani presented the audited statement of accounts for the FY 2011-12 and Budget Estimate for the FY 2013-14. Members expressed their satisfaction and appreciated the management for effectively managing the funds of the DTEA. Shri R. Paramasivam former President and life member of DTEA proposed while Shri. K. Balu, Member of DTEA Sr. Sec. School, Janakpuri Seconded it. Thereupon Chairman announced that the General Body has adopted item No.3 by voice vote and given its approval for item No. 4.

President of DTEA who chaired the meeting, read the auditor's report and asked the members to come forward and seek clarifications if any on it. As no member has raised any query and voiced in unison that they adoptthe report he announced that the auditor's report has been adopted by the General Body through voice vote.

**Item No. 5: Appointment of Auditors:** The present auditing firm has been appointed by the General Body to audit the accounts for the current Year.

**Item No. 6 & 7: Any Other Matter with the permission of Chair:**

Chairman asked the members whether they want discussion on any matter under this item. Many members stood-up and shouted slogans against former Secretary Shri J. Swamimalai, former Jt. Secretary Shri M.A. Suresh and former Treasurer for the mismanagement of the funds of DTEA. A lady member stood-up and said that both of them should not leave the meeting venue and refute the charges of the Secretary with documentary

வழங்கவேண்டிய 5% ஊதியத்தொகை முன் கூட்டியே வங்கியில் செலுத்தப்படுகின்றது என்பதையும் எடுத்துரைத்தார். தொடர்ந்து, தற்காலிகப் பணியில் இருக்கும் ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணி யாளர்களுக்கான ஊதியத்தொகையும் எவ்வித தாமதமுமின்றி வழங்கப்படுகின்றது என்பதையும் ஏழு பள்ளிகளிலுமாக 33 காலியிடங்கள் நிரந்தர பணியாளர்களால் நிரப்பப் பட்டுள்ளன என்பதையும் தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய அவர் 1992 முதல் முந்தைய நிர்வாகக் குழுவினரால் வாங்கப்படாமலிருந்த, கீழ்க் கண்ட பள்ளிகளுக்குரிய GRANT IN AID மொத்த ரூபாய் 1,08,36,377/- தற்போதைய நிர்வாகக் குழு வினரால் கேட்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

| பள்ளி | GRANT IN AID வாங்கப்படாத காலம் | மொத்தப்பணம் (தோராயமாக) |
|---|---|---|
| ஜனக்புரி | 1998 - 2012 | 25,24,833/- |
| பூசா சாலை | 1996 - 2012 | 22,87,331/- |
| ஆர். கே. புரம் | 1992 - 2012 | 22,42,862/- |
| மோதிபாக் | 1995 - 2012 | 8,41,319/- |
| மந்திர்மார்க் | 1997 - 2012 | 6,52,830/- |
| லோதி வளாகம் | 2008 - 2012 | 3,66,000/- |
| இலக்குமிபாய் நகர் | 1992 - 2012 | 19,21,202/- |
| **மொத்தம்** | | **1,08,36,377/-** |

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், இலக்குமி பாய் நகர்த் தமிழ்ப் பள்ளியையும், பூசா சாலை தமிழ்ப் பள்ளியையும் இந்தியன் வங்கியில் அடமானமாக வைத்து ரூபாய் இரண்டு கோடி பெறுவதற்கு முந்தைய நிர்வாகத்தினர் முயன்றுள்ளனர் என்றும், தில்லித் தமிழ்க் கல்விக் கழகத்திற்குச் சொந்தனமான அச்சொத்துக்களை அடமானம் வைப்பதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று L&D அலுவல கத்திலிருந்து ஒரு சான்றிதழ் பெற்று வரும்படி வங்கி வற்புறுத்தியதால் அவர்களின் அந்நோக்கம் வெற்றியடையவில்லை என்றும் தெரிவித்தார். அவர்களின் நோக்கம் நிறைவேறி இருந்தால் ஏழு பள்ளிகளுக்குமாக ஏழுகோடி ரூபாய் வாங்கி இருப்பார்கள், நம் பள்ளிகள் என்னவாகி இருக்கும்? என்று கேட்ட அவர் ... தொடர்ந்து பேசுகையில் திரு சாமிமலை, திரு சுரேஷ் ஆகிய இருவரும் ரூ.50,000/-



Mr. Paramasivam, fmr. President address the gathering

evidence if they have not committed such wrong doings. Whereas they have already disappeared from the meeting venue. Secretary Mr. Raju and Chairman pacified her and the agitating members. Thereafter Chairman declared that the meeting has come to an end and thanked the members. He requested the members to have their lunch and disburse peacefully.

New Delhi  
21.03.2013

**M. Sooriyanarayanan**  
Chairman

---: oOo :---

ரூ.20,000/-, ரூ. 10,000/- என பல காலி வவுச்சர்களை கழகக்கணக்கில் காட்டி இருக்கின்றார்கள். அந்த வவுச்சர்களில் கையெழுத்திட்டுப் பணம் வழங்கியிருப்பவர்களும் பணத்தை வாங்கியிருப்பவர்களும் இவர்களே என்று கூறினார். உறுப்பினர்கள் பலர் ஆத்திரமடைந்து அவர்களுக்கு எதிராகக் குரல் எழுப்பினர்.

கழகத்தின் மற்ற கல்வி சார்ந்த நடவடிக்கைகள் பற்றி கூறும்போது மாணவர்களின் திறன்களை வளர்த்து அவர்களின் ஆளுமைத்திறனை அதிகரிப்பதற்காக எண்ணற்ற நிகழ்வுகள் குறிப்பிட்ட இடைவெளிகளில் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார். மாநில அளவில் நடைபெற்ற கோ-கோ, வாலிபால், கபடி போன்ற விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு பரிசுகள் பெற்று பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளதாகவும் மண்டல அளவில் நடைபெற்ற இலக்கியம் சார்ந்த போட்டிகளிலும்,கலை நிகழ்ச்சிகளிலும், கண்காட்சிகளிலும் கலந்து கொண்டு பரிசுகளைப் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். ECO CLUB, HOUSE ACTIVITIES மூலமாக எண்ணற்ற போட்டிகள் பள்ளிகளில் நடத்தப்பட்டு மாணவர்கள் தங்கள் திறன்களை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புகள் தருவதாகத் தெரிவித்தார். மேலும், 'மாணவர்களின் திறன் வெளிப்பாடு கண்காட்சி' முதன் முறையாக ஏழு பள்ளிகளிலும் நடத்தப்பட்டது என்றும் இது பள்ளிகளுக்கிடையே ஒரு ஆரோக்யமான போட்டியுணர்வைத் தோற்றுவிக்கும் நோக்கத்துடனும் மாணவர்களின் அளப்பரிய ஆற்றலை வெளிக்கொணரும் வகையிலும் நடத்தப்பட்டது என்றும் இரண்டு நாட்கள் நடைபெற்ற இக்கண்காட்சிக்கு வெளியிலிருந்து சிறப்பு நடுவர்கள் வருகை தந்து பாடவாரியாக முதலாம், இரண்டாம் , மூன்றாம் இடம் பிடித்தப் பள்ளிகளைத் தேர்ந்தெடுத்தனர் என்றும் தெரிவித்தார். மேலும் இக்கண்காட்சிக்கு ஏராளமான பார்வையாளர்கள்/பெற்றோர்கள் வருகை தந்ததோடு மட்டுமன்றி நிர்வாகத்தினரின் இந்த முயற்சியை வெகுவாகப் பாராட்டிச் சென்றதாகவும் கூறினார். பொங்கல் விழாவின் ஒரு பகுதியாக ஏழு பள்ளி மாணவர்களுக்கிடையே தமிழ்ப் போட்டிகள் நடத்தப்பட்டன. நில அதிர்வு ஏற்பட்டால் அபாய ஒலி கேட்டவுடன் எவ்வாறு கலைய வேண்டும் என்பதற்கான பயிற்சிகள் பள்ளிகளில் வழங்கப்பட்டன என்றும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஏராளமானப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.இவை தவிர, சுதந்திர தினம், குடியரசு தினம், காந்தி ஜெயந்தி, ஆசிரியர் தினம், குழந்தைகள் தினம், பூமி தினம் போன்றவையும் கொண்டாடப்பட்டதாகத் தெரிவித்தார். கற்றலை மாணவர்கள் விரும்பும் சூழலை உருவாக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் பள்ளிகளில் நடத்தப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

1990வரை நம் கழகத்தின் காலம் பொற்காலங்களாக இருந்திருக்கிறது என்றும் கடந்த இருபது வருடங்களாக நம் கழகம் அப்பெருமையை இழந்து வந்திருக்கின்றது என்றும் இழந்த அப்பெருமையை மீட்பதற்காகத் தற்போதைய நிர்வாகம் முடிந்த அளவு முயற்சிகளை முதல்வர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், முன்னாள் மாணவர்கள், பல நல்ல உள்ளங்கொண்டோர் ஆகியோரின் ஒத்துழைப்போடு மேற்கொண்டு வருகின்றது என்றும் கூறினார். மேலும் தன்னுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பெரிதும் உறுதுணையாய் இருந்து ஒத்துழைப்பு நல்கிய உறுப்பினர்களுக்கும், நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் அனைத்துப்பள்ளி பெற்றோர்களுக்கும், பள்ளி முதல்வர்களுக்கும், பள்ளி ஆசிரியர்களுக்கும் தனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

**17.03.2013 அன்று பூசா சாலை தில்லித் தமிழ்க் கல்விக் கழக மேனிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற தில்லித் தமிழ் கல்விக் கழக ஆண்டு பேரவைக் கூட்ட நிகழ்வுகளின் குறிப்பு.**



Lady member address the gathering condemning former Secretary J. Samimalai and Jt. Secy. M.A. suresh

இதே போல் இடையறாது தொடர்ந்து செயல்பட்டு, தலைநகரின் தலைசிறந்த பள்ளிகளில் ஒன்றாக நம் தில்லித் தமிழ்க கல்விக் கழக பள்ளிகளை உயர்த்து வோம் என்று நிர்வாகக் குழுவினர் சார்பாகத் தாம் உறுதியளிப்பதாக நம்பிக்கையோடு கூறினார். மேலும் தன்னுடைய இந்த ஆண்டறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டு அவர் தனது உரையை நிறைவு செய்தார். அவர் தனது உரையை நிறைவு செய்தவுடன் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பி, தங்கள் மகிழ்வையும், மரியாதை யையும் வெளிப்படுத்தினர். அறிக்கையை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தனர். பேரவைத் தலைவர் அறிக்கை பொதுக்குழுவால் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டதாக அறிவித்தார்.

**எண்-3: 2011 – 2012 நிதி ஆண்டிற்கானத் தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கையை ஏற்றுக்கொள்ளுதல்.**

**எண்-4: 2013 -2014 நிதி ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு கணக்கிற்கு ஒப்புதல் அளித்தல்.**

தில்லித் தமிழ்க் கல்விக் கழகத்தின் பொருளாளராகிய திரு. மணி அவர்கள் நிதி ஆண்டு 2011-2012 ஆண்டிற் கான தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கையையும் நடப்பு 2013 -2014 நிதி ஆண்டிற்கான உத்தேச வரவு செலவுக் கணக்கு விபரங்களையும் பேரவையின் ஒப்புதலுக்கு வைத்தார். உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் முழு திருப்தியைத் தெரிவித்ததோடு நிதி நிர்வாகத் திறனையும் பாராட்டினர். உறுப்பினரும் முன்னாள் தலைவருமான திரு பரமசிவம் அவர்கள் இவ்வறிக்கையை ஏற்றுக்கொள்வதாக முன்மொழிய ஜனக்புரி பள்ளி உறுப்பினர் திரு K.பாலு வழி மொழிந்தார். பொதுக்குழு தனது ஒப்புதலை ஏகமனதாகத் தெரிவித்தது. பேரவைத் தலைவர் பொதுக்குழு 2011-2012 ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதி அறிக்கையை ஏற்றுக்கொண்ட தாகவும், நடப்பு 2013-2014 நிதி ஆண்டின் உத்தேச வரவு செலவுக் கணக்கிற்கு ஒப்புதல் அளித்ததாகவும் அறிவித்தார்.

**எண்-5: 2013-2014 நிதி ஆண்டிற்கான தணிக்கையாளர் நியமனம்.**

தற்போதைய தணிக்கையாளர்களையே தொடர்ந்து நியமிக்க பேரவை ஒப்புதல் அளித்தது.

**எண்-6, 7: தலைவரின் ஒப்புதலுடன் விவாதிக்கப்பட வேண்டிய மற்ற விஷயங்கள்**

விவாதிக்கப்பட வேண்டிய விஷயங்கள் ஏதேனும் உள்ளனவா என்று தலைவர் கேட்டதும் பெரும் பாலானோர் எழுந்து நின்று முன்னாள் செயலர் திரு சாமிமலைக்கு எதிராகவும் முன்னாள் இணைச் செயலர் திரு சுரேஷுக்கு எதிராகவும் மோசமான நிதி நிர்வாகம் செய்த முன்னாள் பொருளாளருக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பிக் கண்டனம் தெரிவித்தனர். செயலர் திரு. இரா.ராஜு அவர்கள் உறுப்பினர்களை அமைதிப்படுத்த முயன்றார். ஒரு பெண் உறுப்பினர் எழுந்து செயலர் அவர்கள் ஆதாரங்களோடு கூறும் குற்றச்சாட்டுகளுக்கு திரு சாமிமலையும், திரு சுரேஷும் விளக்கம் சொல்லாமல் கூட்டத்தை விட்டு வெளியே செல்லக் கூடாது என்று கூறினார். ஆனால் அதற்குள் அவர்கள் இருவருமே கூட்டத்திலிருந்து காணாமல் போயிருந்தனர். உடனே அப்பெண் உறுப்பினர், செயலர் கூறும் குற்றச் சாட்டுகள் தவறாக இருந்திருந்தால் அவர்கள் இங்கேயே இருந்து ஆதாரங்களோடு விளக்கம் கூறியிருக்கலாமே? அவற்றுக்கான மறுப்பு ஆதாரங் களைக் காட்டியிருக்கலாமே? தவறு இருப்பதால் தானே ஓடிவிட்டனர் என்று கேட்டார். தலைவர் அவரை அமைதிப்படுத்தி அமரவைத்ததோடு கூட்டம் இத்துடன் நிறைவடைந்தது என்று அறிவித்து அனைவரும் மதிய உணவு உண்டு செல்ல வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நாட்டுப்பண்ணுடன் பொதுக்குழுக்கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

**புது தில்லி**
**21.03.2013**

**சூரியநாராயணன்**
**தலைவர்.**